**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 02 (அம்பத்தளை அவசர சேமிப்பு செயற்திட்டம்) -2017**

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 02 இன் (அம்பத்தளை அவசர சேமிப்பு செயற்திட்டம்) 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் எஜென்சி பிரான்ஸ் டி அபிவிருத்திக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 செப்தெம்பர் 29 ஆம் திகதிய சீஎல்கே 1008-01 பீ ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையின் 3.4.2 (எச்) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

செயற்திட்டத்தின் கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு பெரும்பாகத்தின் நீர் வழங்கல் நுழைவுகளை விரிவாக்குவதற்கும் தண்ணீர் முறைமையின் நிலைபேறான தன்மையை பாதுகாப்பதுமே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளது. கடன் வசதி உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 13,000 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியனாதுடன் அதில் 70 சதவீதம் அல்லது ரூபா 9,100 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 70 மில்லியன் எஜென்சி பிரான்ஸ் டி அபிவிருத்தியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 3,900 மில்லியன் அல்லது 30 சதவீதத்திற்கு சமமான ஐ.அ.டொலர் 30 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2014 செப்தெம்பர் 29 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி

செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயல் முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ச்சியான அடிப்படையில் காட்டக்கூடியவாறு போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன்வசதி உடன்படிக்கையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானது இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் வசதி உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

இது வரையான எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்தான செம்மையாக்கங்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியாதிருந்ததென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள**

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) அம்பத்தளையிலிருந்து எலி கவுஸ் நீர்த்தேக்கம் வரையான 09 கிலோமீற்றர்கள் வளையும் தன்மையுள்ள இரும்புக் குழாய்களை வழங்கி பொருத்துதலில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தாரர்க்கு 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தவேண்டிய ரூபா 22.88 மில்லியன் தொகையொன்று கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. மேலும், மேற்குறிப்பிட்ட ஒப்பந்தத்தின் ரூபா 1.04 மில்லியன் தொகையான செய்துமுடிக்கப்பட்ட வேலைகளின் பெறுமதி இரண்டு

தடவைகள் கணக்கிலிடப்பட்டிருந்தது. ஆதன் விளைவாக, நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 184.08 மில்லியன் தொகையான நடைமுறை வேலைகளின் பெறுமதி ரூபா 21.84 இனால் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 73.46 மில்லியன் கூட்டுத்தொகையான பெறுமதி சேர் வரி செலுத்தப்பட்டிருந்ததுடன் நடைமுறை வேலையின் கீழ் காட்டுவதற்கு பதிலாக இலங்கை அரசிடமிருந்து பெறப்பட்ட பங்களிப்புக்கு எதிராக தீர்ப்பனவு செய்யப்பட்டது.

### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

அரச பெறுகை வழிகாட்டல்களின் 8.9.3 ஆம் பந்தியின் பிரகாரம், ரூபா 500 மில்லியன் அல்லது அதனை விட அதிகமான ஒப்பந்த பெறுமதியுடன் தொடர்புடைய முறையான உடன்படிக்கைகள் வரிசை அமைச்சு செயலாளரினால் கையொப்பமிடல் வேண்டும் என வேண்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், கொதட்டுவ நீர்த்தேக்கத்தின் நிர்மாணம், கொதட்டுவயிலுள்ள பூஸ்டர் நீர்ப்பம்பி நிலையம், அம்பத்தளையிலிருந்து இலிருந்து எலிய கவுஸ் வரையான 09 கிலோமீற்றர் வளையும் தன்மையுள்ள இரும்புக் குழாய்களை வழங்கி பொருத்துதல் மற்றும் அவற்றிற்கான ஆலோசனை சேவைகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தலைவரினால் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிசார் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2017 திசெம்பர் 31 வரை நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

மேற்குறித்த தகவலின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட

| **மூலம்** | **கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை** | | **மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு** | **பயன்படுத்தப்பட்ட நிதிகள்** | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | **மீளாய்வாண்டின் போது** | | **2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | |
| | **ஐ.அ. டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ஐ.அ. டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ஐ.அ. டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| ஏஎவ்டி | 70.00 | 9,100.00 | 111.1 | - | - | 5.00 | 695.17 |
| இலங்கை அரசாங்கம் | 30.00 | 3,900.00 | 34.4 | 0.22 | 34.39 | 0.64 | 89.92 |
| **மொத்தம்** | **100.00** | **13,000.00** | **145.5** | **0.22** | **34.39** | **5.64** | **785.09** |

திகதியிலிருந்து 03 வருடங்கள் கழிந்த பின்னர் ரூபா 9,100 மில்லியனிற்குச் சமனான 2 ஐ.அ.டொலர் 70 மில்லியன் மொத்த ஒதுக்கீடுகளில், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 695.17 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 5.00 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் செயற்பாடுகளினைப் பூர்த்தி செய்வதற்கு கிடைக்கக்கூடியதாக மற்றும் செயற்திட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் ஒதுக்கப்பட்ட நிதிகளினைப் பயன்படுத்துவதற்கு விரிவான திட்டமொன்றினை செயற்திட்டம் தயாரித்திருக்கவில்லை. நிதிகளின் பயன்பாட்டின் மீதான மந்தமான செயலாற்றல் காரணமாக, ரூபா 146.80 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொலர் 1.04 மில்லியன் ஒப்படைப்புக் கட்டணங்கள் நிதியளிப்பு முகவரினால் அறவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.2 பௌதீக செயலாற்றல்

கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், அப்பத்தளையிலிருந்து எலி கவுஸ் நீர்த்தேக்கம் வரையான 09 கிலோ மீற்றர் வளையும் தன்மையுள்ள இரும்புக் குழாழ்களினை வழங்கி பொருத்துவதற்கான ஒப்பந்தத்தின் கீழ் வேலைகள், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 84.76 சதவீத வேலைகளின் பௌதீக செயலாற்றலினை அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 18.72 சதவீத மந்தமான செயலாற்றலினை காட்டியது. சுத்திகரிப்பு பொறி மற்றும் நீரூற்பத்தியில் நீரிறைக்கும் இயந்திரங்களின் மீளமைப்பு மற்றும் புனரமைப்பு, மேற்பார்வை கட்டுப்பாடு மற்றும் தரவு சேகரிப்பு முறைமையின் தாபிப்பு மற்றும் அப்பத்துளையில் பின்னோக்கி செல்லும் தண்ணீரின் அறவிடும் முறைமை மற்றும் கட்டிடத்தின் நிர்மாணம் மற்றும் கொத்தட்டுவ முதல் கொழும்பு நகரம் வரை 05 கிலோ மீற்றர் வளையும் தன்மையுள்ள இரும்புக் குழாய்களை வழங்கி பொருத்துதல் போன்ற பல்வேறு சிவில் நிர்மாண வேலைகளிற்கான பணிகளை செயற்திட்டமானது 2014 செப்தெம்பர் 29 இல் தொடங்கியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 வரையிலும் அளிக்கப்பட்டிருக்கவில்லை. கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், ஒப்பந்தங்களினை வழங்குவதிலுள்ள தாமதங்கள் மற்றும் ஒப்பந்தங்களின் குறைந்தளவான செயலாற்றல் என்பன செயற்திட்ட செயற்பாடுகளின் அமுல்ப்படுத்தல் மீதான தாமதமான செயலாற்றலுக்கு காரணமாகக் காணப்பட்டது.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) கொத்தட்டுவயிலுள்ள நீர் சுத்திகரிப்புப் பொறியின் தரையிலுள்ள நீர்தேக்கம், நீர்த்தாங்கி மற்றும் அலுவலக கட்டிடத்தின் திணைக்களத்திற்கான காணியின் உரிமைத்துவம் 2017 மார்ச் 31 வரையிலும் தேசிய நீர் வழங்கள் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொத்தட்டுவ நீர்த்தேக்கம் மற்றும் 1200 மில்லிமீற்றர் வளையும் தன்மையுள்ள இரும்புக் குழாய்களினை வழங்கி பொருத்தும் உயர்த்தி பம்ப் நிலையத்தின் நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் செயற்திட்டத்தின் முன்னுரிமை பெறுகையாகக் காணப்பட்ட போதிலும், 2015 ஏப்ரல் 21 இல் அழைப்பு அழைத்த திகதியிலிருந்து 990 நாட்கள் தாமதத்துடன் 2018 சனவரி 04 இல் மாத்திரம் தொடர்புடைய வேலைகளுக்கான ஒப்பந்த உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்தங்கள் 2018 மார்ச் 31 வரையிலும் தளத்தினை நகர்த்தியிருக்காமை அவதானிக்கப்பட்டது.

(இ) அப்பத்தளையிலிருந்து எலி கவுஸ் நீர்த்தேக்கம் வரையான 09 கிலோ மீற்றர் வளையும் தன்மையுள்ள இரும்புக் குழாய்களினை வழங்கி பொருத்துவதற்கான ஒப்பந்தம் 2015 யூலை 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2018 மே 04 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், மூலப்பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்களினை விநியோகிப்பதிலுள்ள தாமதங்கள், ஒப்பந்தக்காரரின் பலவீனமான நிதிசார் இயலளவு காரணமாக, ஒப்பந்தத்தின் 22 மாதங்கள் காலப்பகுதியில், 19 மாதங்கள் கழிந்த பின்னர் 2018 சனவரி 30 இல் மாத்திரம் ஒப்பந்தத்தின் குளங்களினை அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) அப்பத்தளை நீர் சுத்திகரிப்பு பொறியின் எரிசக்தி நுகர்வினைக் குறைப்பது செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாகக் காணப்பட்ட போதிலும், 2018 மார்ச் 31 வரை செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 42 மாதங்கள் கடந்திருந்த பின்னரும், எரிசக்தி நுகர்வு நோக்கங்களினை குறைப்பதுடன் நேரடியாக தொடர்புடைய மேற்பார்வைக் கட்டுப்பாடு மற்றும் தரவு கையகப்படுத்தல் முறைமையினை ஸ்தாபித்தல் மற்றும் சுத்திகரிப்பு பொறியிலுள்ள பம்பிகளின் மாற்றுகை மற்றும் புனரமைப்பிற்கான ஒப்பந்தத்தினை வழங்குவதற்கு செயற்திட்ட கண்காணிப்பு அலகு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(உ) ஆரம்ப கட்டங்களில் செயற்திட்டத்தினால் நிர்மாண வேலைகள் மற்றும் பெறுகைகள் மீது எவ்விதமான முறையான மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டிருக்காத பல்வேறு சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டமையினால், விலை வேறுபாடுகளுடன் மேலதிக கிரயங்கள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறு கணக்காய்வில் அனுமதிக்க முடியாதிருந்தது. வளையும் தன்மையுள்ள 09 கிலோ மீற்றர் இரும்புக் குழாய்களினை வழங்கி பொருத்துவதற்கான ஒப்பந்தத்தின் பொறியியலாளர் மதிப்பீட்டில் காட்டப்பட்ட 2.5 மீற்றர் தொடக்கம் 3.0 மீற்றர் வரையான வீச்சில் அகழி ஆழத்துடன் 500 மீற்றர் தூரத்திற்கு குழாய்களினைப் பொருத்தும் வேலைகள் ஒப்பந்தம் வழங்கப்பட்ட பின்னர் 1,587 மீற்றர்கள் தூரம் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. மேலும், 3.0 மீற்றருக்கு மேலதிகமான அகழி ஆழத்துடனான 985.20 மீற்றர் தூரம் மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன், அவற்றின் மீது புதிய விகிதங்களினை பிரயோகிப்பதற்கு ஒப்பந்தங்களினை அனுமதியழித்து பொறியியலாளர்களின் மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள

### 3.4 குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

நடைமுறைச் செலவினத்தை எதிர்கொள்வதற்கு விசேட டொலர் கணக்கிலிருந்து செயற்திட்டத்தின் இரண்டாம் பாரம்பரிய வங்கிக் கணக்கிலிருந்து 2016 மார்ச் 30 வரை வருமானத்தின் ரூபா 5 மில்லியன் மாற்றஞ்செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அவற்றில், 2017 திசெம்பர் 31 இல் வரையிலும் ரூபா 1.95 மில்லியன் தொகையொன்று செலவிடப்படாது தொடர்ந்தும் காணப்பட்டது.

### 3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட செலாற்றல் அறிக்கையின் பிரகாரம், அம்பத்தளையிலுள்ள சுத்திகரிப்புப் பொறியின் புனர்நிர்மானம் மற்றும் பதிலிடுகை வேலைகள் மற்றும் உள்ளீர்ப்பு 2020 மே மாதமளவில் பூர்த்தியதக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் செயற்பாடுகளினை மூடுவதற்கான திகதியினை கருத்திற்கொள்ளாது 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொடர்புடைய வேலைகளின் பூர்த்தியாக்கல் திகதி நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(ஆ) அபத்தளையிலிருந்து எலிய கவுஸ் நீர்த்தேக்கம் வரையான வளையும் தன்மையுள்ள இரும்புக் குழாய்களை வழங்கி பொருத்துதல் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் தள அலுவலகங்களின் பராமரிப்பிற்கான ரூபா 34.36 மில்லியன் தொகையான அனைத்து கிரயங்களும் கணியச் சிட்டையின் 1.31 வகையின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றதுடன் உள்ளடக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், கணியச் சிட்டையின் 1.22 ஆம் வகையின் கீழ் தள அலுவலகத்தின் மின்சாரம், நீர், தொலைபேசி மற்றும் ஏனைய வசதிகளின் பராமரிப்பிற்கான கிரயங்களினை எதிர்கொள்வதற்கு ரூபா 3.68 மில்லியன் தொகையொன்று மேலதிகமாக ஒப்பந்தாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(இ) கொத்தட்டுவ நீர்த்தேக்கம் மற்றும் பூஸ்டர் பம்ப் நிலையத்தின் நிர்மாணிப்புக்கு ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்ட கணியச்சிட்டையில் பாதுகாப்பு பொறுப்பாளர் தங்குமிடம் மற்றும் ஏனைய 06 தங்குமிடங்களின் இடமாற்றத்திற்கான நிர்மாண வேலைகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், தீர்மாணிக்கப்பட்ட ஒப்பந்த கிரயத்திற்கு, நடைமுறை சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் உயர் விகிதங்களினை பிரயோகிப்பதற்கு ஒப்பந்தாரர்களினை அனுமதிப்பதற்காக தற்காலிகமான தொகைகளாக கிரய மதிப்பீட்டில் முறையே ரூபா 10 மில்லியன் மற்றும் ரூபா 95 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 3.6 நிதிக் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்

முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க சுற்றறிக்கையால் வேண்டப்பட்டவாறு, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் உள்ளக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.